செ.வெ.எண்: 192 நாள்: 02.03.2020

**வாக்குச்சாவடி பட்டியல் மீதான கருத்து கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (02.03.2020) வரைவு வாக்குச்சாவடி பட்டியல் மீதான கருத்து கேட்பு கூட்டம் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நகர்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு 26.02.2020 அன்று முதல் அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் வரைவு வாக்குச்சாவடி பட்டியல் வெளியிடப்பட்டு, அந்தந்த நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இப்பட்டியல் மீதான கருத்து கேட்பு கூட்டம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்றையதினம் நடத்தப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 8 பேரூராட்சிகள், 2 நகராட்சிகளும் உள்ளன. மாநில தேர்தல் ஆணைய அறிவுரைகளின்படி 8 பேரூராட்சிகளில் 121 வாக்குச்சாவடிகளும், 2 நகராட்சிகளில் 151 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 272 வாக்குச்சாவடிகள் எதிர்வரும் நகர்புற உள்ளாட்சித் தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

இதில் பேரூராட்சியை பொறுத்தவரை 37,270 ஆண் வாக்காளர்களும், 38,438 பெண் வாக்காளர்களும் மற்றும் இதரர் (மூன்றாம் பாலினம்) 3 வாக்காளர்கள் என மொத்தம் 75,711 வாக்காளர்கள் உள்ளனர். நகராட்சியை பொறுத்தவரை 75,621 ஆண் வாக்காளர்கள், 80,920 பெண் வாக்காளர்கள் மற்றும் இதரர் (மூன்றாம் பாலினம்) 16 வாக்காளர்கள் என மொத்தம் 1,86,557 வாக்காளர்கள் உள்ளனர்.

மேலும் இறுதி வாக்குச்சாவடி பட்டியலானது 5.3.2020 அன்று வெளியிடப்படவுள்ளது. புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியல் மாநில தேர்தல் ஆணைய அறிவுரையின்படி 20.3.2020 அன்று வெளியிடப்படவுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சி தேர்தல்) கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**